**இலங்கை ஹொக்கி சம்மேளனம் - 2025**

**-----------------------------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை ஹொக்கி சம்மேளனத்தின் (''சம்மேளனம்'') 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, வருமானம் மற்றும் செலவின கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுக்கள் (திருத்திய) சட்டத்தின் பிரிவு 9 ஆல் திருத்தியமைக்கப்பட்ட 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் பிரிவு 21 அ வின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சம்மேளனத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் கணக்காய்வு விடயப்பரப்பு பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எ.ஃப்ஆர்எஸ்)

தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சம்மேளனத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சம்மேளனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக

இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சம்மேளனத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி சம்மேளனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சம்மேளனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சம்மேளனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சம்மேளனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சம்மேளனம் செயற்படுகின்றதாஎனவும்இ

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவு

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்டபான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிக்காக சர்வதேச ஹொக்கி சம்மேளனத்திற்கு மற்றும் ஆசிய ஹொக்கி சம்மேளனத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 226,271 பெறுமதியிலான உறுப்புரிமைக் கட்டணங்கள் திரண்ட செலவாக இனங்காணப்படவில்லை. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் மிகை இத் தொகையினால் மிகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது. | 2026 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளில் பொருத்தமான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | மீளாய்வாண்டுடன் தொடர்புடைய செலவினங்கள் சரியான முறையில் இனங்காணப்படுதல் வேண்டும். |
| (ஆ) | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,400,000 பெறுமதியான செலுத்த வேண்டிய தொகை நிதிக்கூற்றுகளில் இனங்காணப்படவில்லை. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் மிகை இத் தொகையினால் மிகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது. | முன்னர் ரூபா 200,000 செலுத்தப்பட்டுள்ளதுடன், எஞ்சிய மீதியை விரைவில் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | அறிக்கைடும் காலப்பகுதியின் முடிவில் உள்ள பொறுப்புகள் சரியான முறையில் இனங்காணப்படுதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டியவை

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சம்மேளனத்தின் தலைவருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 961,788 மற்றும் ஆசிய ஹொக்கி சம்மேளனத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 636,984 பெறுமதியிலான செலுத்த வேண்டிய கணக்குகள் முறையே 2022 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளிலிருந்து இவ் அறிக்கை வெளியிடப்படும் திகதி வரை கொடுத்துத் தீர்க்கப்படாமல் எஞ்சியிருந்தன. | தலைவரின் கொடுப்பனவைத் தீர்ப்பதற்குச் சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழு அனுமதி வழங்கியுள்ளது. சம்மேளனத்தில் நிதிப் பற்றாக்குறை நிலவுவதால், விளையாட்டு மைதானங்கள் மூலம் ஈட்டப்படும் வருவாயைப் பயன்படுத்தி அதனைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகள் | செலுத்த வேண்டிய தொகைகளைத் தீர்ப்பதற்கோ அல்லது சரிசெய்வதற்கோ உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

செய்யப்பட்டுள்ளன.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|
| 2025 மே 21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி இல 24/2437 இல் பிரசுரிக்கப்பட்ட 2025 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விளையாட்டு துறைக்கான தேசிய சங்கங்களின் ஒழுங்குவிதிகளின் | | | |
| (i) III ஆம் பகுதியின் 9 (9) ஆம் பிரிவு | வீரர்களின் சுய விபரங்கள், பங்களிப்புப் பதிவுகள், பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அணிகள் மற்றும் திறமைசார் தரவுகளைக் கொண்ட தகவல் முறைமை ஒன்று கட்டமைக்கப்பட்டு பேணப்படவில்லை என்பதுடன், தெரிவு செய்தல், தரவரிசைப்படுத்தல் மற்றும் வகைப்படுத்தல் செயற்பாடுகளின் போது திறமையான வீரர்களை அடையாளம் காண்பதற்கு இத்தகைய தரவுகள் பயன்படுத்தப்படவில்லை. | தாமதமின்றி தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் தரவுத்தள முறைமை ஒன்றைப் பேணுவதற்கும் நடவடிக்கை எடுப்பது குறித்து கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. | சம்மேளனமானது தகவல் அமைப்பு ஒன்றை பேணுதல் வேண்டும். |
| (ii) III ஆம் பகுதியின் 9 (23) ஆம் பிரிவு | மாவட்ட விளையாட்டுச் சங்கமானது அதன் அதிகார வரம்பிற்குட்பட்ட தொடர்புடைய விளையாட்டை மேம்படுத்துவதற்கும் | எதிர் வரும் காலங்களில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சம்மேளனமானது மாவட்ட விளையாட்டுச் சங்கங்களை முறையான அடிப்படையில் |

| | | | |
|---|---|---|---|
| | மேற்பார்வை செய்வதற்கும் பொறுப்பாகும். இதில் ஆண்டுதோறும் குறைந்தது இரண்டு பிராந்தியப் போட்டிகளை நடாத்துதல், வீரர்களுக்குப் பயிற்சி அளித்தல், நிலையான பிராந்திய விளையாட்டுத் ஒதுக்குகளைப் பராமரித்தல், மற்றும் பிராந்திய விளையாட்டுச் சங்கங்களின் முறையான முகாமைத்துவம் மற்றும் பிரமாணங்களை உறுதி செய்தல் ஆகியவை அடங்கும். எவ்வாறாயினும், சம்மேளனமானது அவ்வாறு செய்வதில் தவறிழைத்துள்ளது. | | மேற்பார்வை மற்றும் முகாமை செய்ய வேண்டும். |
| (iii) III ஆம் பகுதியின் 10 (1) ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட நான்கு தேசிய சம்பியன்ஷிப் தொடர்பான விரிவான அறிக்கை, அந்த சம்பியன்ஷிப் நிறைவடைந்து 14 நாட்களுக்குள் விளையாட்டுத்துறை பணிப்பாளர் அவர்களுக்குக் சம்மேளனத்தினால் சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்துகள் எதுவும் பெறப்படவில்லை. | தேசிய சம்பியன்ஷிப் தொடர்பான விரிவான அறிக்கை விளையாட்டுத்துறை பணிப்பாளர் அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் |
| (iv) V ஆம் பகுதியின் 14 (19) ஆம் பிரிவு | இணைக்கப்பட்ட நிறுவனங்களின் பதிவுகள் சம்மேளனத்தினால் பேணப்படவில்லை என்பதுடன், இணைக்கப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்திற்கும், விளையாட்டுச் கழகத்திற்கும் அல்லது பிற அமைப்புக்கும் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்படவுமில்லை. | எதிர்காலத்தில் பதிவுச் சான்றிதழ்களை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பதிவுசெய்யப்பட்டு இணைக்கப்பட்ட சங்கங்கள் தொடர்பான பதிவுகள் பேணப்படுவதுடன், சான்றிதழ்களும் வழங்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சம்மேளனத்தின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 9,280,740 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 3,406,407 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,874,333 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மைதான புல்வெளி வருமானம் ரூபா 8,400,916 ஆல் அதிகரித்திருந்தமையே இம்முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்கள் அதிகரிக்கின்ற அல்லது குறைகின்ற சதவீதத்துடன் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| விடயம் | 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறுமதி | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறுமதி | வேறுபாடுகள் | |
|---|---|---|---|---|
| | | | சாதகம்/ (பாதகம்) | வீதம் |
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| **வருமானம்** | | | | |
| மானியம் மற்றும் நன்கொடை | 16,790,834 | 23,537,554 | (6,746,720) | (29) |
| மைதான புல்வெளி வருமானம் | 16,786,692 | 4,284,046 | 12,502,646 | 292 |
| பதிவுக் கட்டணம் | 528,600 | 458,000 | 70,600 | 15 |
| ஏனைய வருமானம் | 18,375 | 65,389 | (47,014) | (72) |
| **செலவினம்** | | | | |
| விளையாட்டு நடவடிக்கைச் செலவினங்கள் | 17,911,507 | 21,037,769 | 3,126,262 | 15 |
| மைதான புல்வெளி செலவினம் | 6,608,666 | 2,506,935 | (4,101,731) | (164) |
| நிதிக் கிரயம் | 58,165 | 4,200 | (53,965) | 1285 |
| ஏனைய செலவினங்கள் | 265,423 | 1,389,677 | 1,124,254 | 81 |

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டில் மைதான புல்வெளி நடவடிக்கைகள் மூலம் ரூபா 10,178,026 தேறிய வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், தொடர்புடைய செலவினங்களின் 164 சதவீத அதிகரிப்பை விட, வருமானத்தில் ஏற்பட்ட 292 சதவீத அதிகரிப்பினால் சாத்தியமானது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|
| சம்மேளனத்தின் யாப்பினைத் திருத்துவதற்கான செயல்முறையை நிறைவு செய்வதற்கும், தேர்தலை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் தவறியமை காரணமாக, 2026 மே 21 திகதிய 2489/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி, விளையாட்டுத்துறை அமைச்சரினால் 2026 மே 19 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சம்மேளனத்தின் பதிவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு, இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார். | இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் 2026 மே 19 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். | சம்மேளனமானது யாப்பினைத் திருத்தும் செயல்முறையை நிறைவு செய்வதற்கும், தேர்தலை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுத் திட்டத்தின்படி, ஆறு (06) உள்நாட்டு விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கும், எட்டு (08) சர்வதேசப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டில் நான்கு (04) | போதுமான நேரமின்மை காரணமாக நான்கு உள்நாட்டு விளையாட்டுப் போட்டிகள் மட்டுமே நடாத்தப்பட்டன. திட்டமிடப்பட்ட சர்வதேசப் போட்டிகள் 2025 ஆம் ஆண்டில் நடாத்தப்படவில்லை | சம்மேளனமானது நிகழ்வுகளைத் திட்டமிட்டவாறு நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

உள்நாட்டு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் இரண்டு (02) சர்வதேசப் போட்டிகள் மட்டுமே நடாத்தப்பட்டிருந்தன.